| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.குழந்தைராஜ்<br>த/பெ.திரு.அடைக்கலசாமி | அ.வ.எண். 92/2016 | 29.06.2026 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான் தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.28 முதல் வா.சா.ஆ.40 வரையிலான ஆவணங்களில் வா.சா.ஆ.34, வா.சா.ஆ.35, வா.சா.ஆ.36 ஆவணங்களை தவிர, மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கின் பின்னிட்டவை என்றால் சரிதான், வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்களை தற்போது தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.34 ஆவணம் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாபாஸ்புத்தகம் என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.34 பட்டாபாஸ்புத்தகத்தின் படி புல எண்.112/2 ல் உள்ள 13 ஏர்ஸ் இடம் 1ம் பிரதிவாதிக்கு உரியது என்றால் சரிதான், அவர் தான் உரிமையாளர் நான் மேற்படி இடத்தில் குத்தகைதாரர்தான். புல எண்.112/2 ல் உள்ள 13 ஏர்ஸ் இடத்திற்கு நான் குத்தகைதாரர் என்பதற்கு குத்தகை ரசீதோ, குத்தகைதாரர் பதிவு சான்றிதழோ, குத்தகை ஒப்பந்தமோ உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழி குத்தகை ஒப்பந்தம் தான் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ஜான்செல்வநாதனுக்கு உடல்நிலை சரியில்லாததால் 2005 ல் வாய்மொழியாக மேற்படி சொத்தை குத்தகைக்கு விட்டார்.

3) 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ஜான்செல்வநாதனோ, 1ம் பிரதிவாதியோ மேற்படி சொத்தை எங்களுக்கு எக்காலத்திலும் குத்தகைக்கு விடவில்லை என்றால் சரியல்ல, எங்களுக்கு குத்தகைக்கு விட்ட விவரம் 1ம் பிரதிவாதியின் தாயார், சகோதர, சகோதரிகள் மற்றும்

அவரது மகள் ஆகியோருக்கு நன்கு தெரியும். 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் வா.சா.ஆ.35 ஆனது தாவா 4 வது அயிட்டத்தில் வரிசை எண்.3 மற்றும் 9 ல் கண்ட சொத்துக்களுக்கான கிரைய ஆவணம் என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.35 கிரைய ஆவணத்தின் அசலை 1ம் பிரதிவாதியின் தாயார் எனக்கு கொடுத்தாரா என்றால் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் காலத்திலே அனைத்து அசல் ஆவணங்களையும் எங்களிடம் கொடுத்துவிட்டார். மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

5) தற்போது 1ம் பிரதிவாதியுடன் அவரது தாயார் மற்றும் சகோதரிகளுக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் எங்களுக்கு குத்தகைக்கு விடும்முன்பு, பேசி வைத்து இருக்கும் பொழுது 1ம் பிரதிவாதியை மேற்படி நிலங்களை பராமரிக்கும் படி கேட்டதற்கு அவர் மறுத்ததால் எங்களுக்கு குத்தகைக்கு கொடுத்தார், அதன்பின் பேச்சு வார்த்தை இல்லை.

6) வா.சா.ஆ.35 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு, மேற்படி கிரைய படி பாத்தியப்பட்டது என்பதால், அதை பொறுத்து குத்தகைக்கு விட 1ம் பிரதிவாதியின் தாயாருக்கோ, சகோதரிகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.36 கிரைய ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு, மேற்படி கிரைய படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

7) 1ம் பிரதிவாதியுடன் அவரது தாயார் மற்றும் சகோதரிகளுக்கு சொத்து தொடர்பாக பிரச்சனை இருந்ததால், 1ம் பிரதிவாதியின் தாயார் மற்றும் சகோதரிகள் மோசடியாக வா.சா.ஆ.35, 36 கிரைய ஆவணங்களை என்னிடம் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல, மேற்படி சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கும்போது அவர் இளவர். வா.சா.ஆ 31 நுகர்பொருள் வாணிப கழகத்தில் வழங்கிய நெல் கொள்முதலுக்கான ரசீதில் வழக்கு சொத்திற்கான புல எண் எதுவும் காட்டப்படவில்லை என்றால் கிராம நிர்வாக அலுவலர் புல எண்ணை குறிப்பிட்டு குறித்து கொடுத்த அடங்கல் பதிவேட்டின் அடிப்படையிலேயே ரசீது வழங்கப்பட்டது.

8) வா.சா.ஆ 31 நுகர்பொருள் வாணிப கழகத்தில் வழங்கிய நெல் கொள்முதலுக்கான ரசீதுடன் இணைக்கப்பட்டுள்ள அடங்கல் பதிவேட்டினை வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் யார் என்றால் விரகாலூர் கிராம நிர்வாக அலுவலர், ஆனால் பெயர் தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியர் அலுவலக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் மேற்படி அடங்கல் ஆவணங்களை வழங்கியுள்ளதால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9) இவ்வழக்கு சொத்துக்கள் தொடர்பாக 1ம் பிரதிவாதி இலால்குடி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் வா.சா.ஆ.35, 36 கிரைய ஆவணங்களில் கண்ட சொத்துக்களை தவிர, இதர வழக்கு சொத்துக்களை பொறுத்து நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரிதான்.

10) வழக்கு சொத்துக்களை பொறுத்து நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டு உரிமையாளர்கள் என்பதால் இலால்குடி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் பாகபிரிவினை வழக்கில் தான் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என்று தீர்மானிக்க முடியும் என்றாலும், கூட்டு உரிமையாளரான 1ம் பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் நான் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் கண்ட சில சொத்துக்களை பொறுத்து நான் குத்தகைதாரர் அல்ல என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.